**தேசிய பெருந்தெருக்கள் துறை (மேலதிக நிதியளிப்பு) செயற்திட்டம் - 2017**

தேசிய பெருந்தெருக்கள் துறைச் செயற்திட்டத்தின் (மேலதிக நிதியளிப்பு) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2767–எஸ்ஆர்ஜ இலக்க 2011 திசெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட கடன் உடன்படிக்கையின் உறுப்புரை (II) இன் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அப்போதைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. அண்ணளவாக 62 கிலோ மீற்றர் தேசிய பெருந்தெருக்களை தரமுயர்த்துதல், புனரமைத்தல் மற்றும் மீள ஒருங்கிணைத்தல் மூலம் தேசிய போக்குவரத்தின் செயற்திறனை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 13,728 மில்லியனுக்குச் சமனான யூஎஸ் டொலர் 105.60 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா. 11,050 மில்லியனுக்குச் சமனான யூஎஸ் டொலர் 85 மில்லியனை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது 2017 செப்தம்பர் 11 இல் பூர்த்தி செய்யப்பட்ட தேசிய பெருந்தெருக்கள் துறைச் செயற்திட்டம் என அழைக்கப்படும் அதனுடனொத்த செயற்திட்டங்களுக்கான மேலதிக நிதிகளை வழங்குவதற்காக இச்செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இருப்பினும் இவ் இரண்டு செயற்திட்டங்களும் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவினால் நிர்வகிக்கப்படுகின்றது, உரிய செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 ற்கான நிதிக்கூற்றுக்கள் வேறுவேறாக சமர்ப்பிக்கப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2011 திசெம்பர் 14 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்வதற்குப் பட்டியல்படுத்தப்பட்டு 2017 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச்சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி

செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்பமீதி இறுதி மீதிகள் மற்றும் அக்கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அக்கணக்கிற்கான மீள் நிரப்புகளும் செயற்றிட்டத்தால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுவும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டு பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதுவும்.

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்.

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஔ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்துக்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து உருவாகும் செம்மையாக்கல்களின் தாக்கங்களை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்பமீதி இறுதிமீதிகள் மற்றும் அக்கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அக்கணக்கிற்கான மீள்நிரப்பல்களும் செயற்றிட்டத்தால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுவும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டு பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்.

(ஈ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட வேண்டுதல்களுக்கு இணங்க சமர்ப்பிக்கப்பட்ட செலவுக் கூற்றுக்களானவை மீள்நிரப்பல்களுக்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்துவதற்கு நியாயமாக நம்பிக்கை கொள்ள முடியும் என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) காணி கொள்வனவிற்கான செலவீட்டை எதிர்கொள்ள 2014 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற்றுக் கொண்ட ரூபா

1,281 மில்லியன் மற்றும் ரூபா 237 மில்லியன் முறையே நிதிக் கூற்றுக்களில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பங்களிப்பு செய்யப்பட்ட மூலதன உதவி என காட்டுவதற்கு பதிலாக செலுத்த வேண்டிய மீதியாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) தவறான கணக்கீட்டு தீர்வுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த காணி கொள்வனவிற்கான வட்டி ரூபா 869,382 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதும் 2017 திசெம்பர் 31 வரையுமான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறித்த சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதி | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஆம் ஆண்டின் போது | | 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு | |
| | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லின் |
| ஏடீபி | 85.00 | 11,050 | 200.0 | 1.16 | 171.42 | 78.87 | 10,441.29 |
| ஜீஓஎஸ்எல் | 20.60 | 2,678 | 84.5 | 0.57 | 84.15 | 39.43 | 5,220.21 |
| மொத்தம் | 105.60 | 13,728 | 284.5 | 1.73 | 255.57 | 118.32 | 15,661.50 |

சிவில் கட்டுமான பணிகளில் காணப்பட்ட மந்தகதியான செயற்பாடு, சரியான திட்டமிடலின்மை மற்றும் மேலும் பல காரணங்களினால் கடன் வழங்கும் முகவரினால் வழங்கப்பட்ட 7.20 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 923 மில்லியனிற்கு சமமான யூஎஸ் டொலர் 6.13 மில்லியன் செயற்திட்ட கால இறுதியில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை மேலும் இது 2017 செப்டம்பர் 11ல் கடன் வழங்கும் முகவருக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.

### 3.2 பௌதீக செயல் முன்னேற்றம்

செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், தெற்கு அதிவேக நெடுஞ்சாலையுடன் நேரடியாக தொடர்புபட்ட ஹிக்கடுவ மற்றும் அலுத்கம ஆகிய 02 வீதிகளில் 62 கிலோமீற்றர்கள், மேலும் மாத்தறை - ஹோமாகம, கடுகுருந்த - நாகொடை, நுகேகொட - ஹோமாகம மற்றும் பாமங்கட - கெஸ்பேவ ஆகிய மேலதிக 4 வீதிகளினையும் மேம்படுத்தல் மற்றும் மறுசீரமைக்க திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், அவ்வீதிகளில் 55.31 கிலோமீற்றர்களுக்கான மறுசீரமைப்பு வேலைகள் மாத்திரமே 2016 டிசெம்பர் 31 வரையில் வடிவமைக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செலவு மதிப்பீட்டில் போதியளவு அவதானம் இன்மையால், வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் கிரயத்தில் 0.71 சதவீதம் தொடக்கம் 22.98 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 04 ஒப்பந்தங்களின் கிரயமானது ரூபா 4.56 மில்லியன் தொடக்கம் ரூபா 283 மில்லியன் என்ற வீச்சுக்குள் அதிகரித்து காணப்பட்டது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மாத்தறையில் இருந்து ஹோமாகம வரையான வீதியின் புனர்நிர்மான மற்றும் முன்னேற்ற பணிகள் திட்டமிட்டபடி பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. அதேவேளை ஏனைய வீதிகள் 172 நாட்கள் தொடக்கம் 338 நாட்கள் என்ற வீச்சுக்குள் தாமதமாக முடிவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும் செயற்திட்டமானது 03 ஒப்பந்தங்களுக்கு தாமதகட்டணமாக மொத்தம் ரூபா 128 மில்லியன் அறவிட்டிருந்தது. இது பின்னர் நேரநீடிப்பின் ஊடாக மீளப் பெறப்பட்டிருந்தது.

(இ) வீதியின் இருபக்கங்களிலுமுன்ன மரங்களை அகற்றுவதற்காக அளவீட்டுப் பட்டியலில் ரூபா 3.6 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும் சுற்றுச்சூழல் பாதிப்பை குறைப்பதற்கான மரமீள்நடுகைகளுக்காக எதுவித ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்படடிருக்கவில்லை. இதனால் வீதியின் இரு புறங்களிலுமுள்ள 300 மில்லிமீற்றர் தொடக்கம் 2000 மில்லிமீற்றர் சுற்றளவு கொண்ட 1620 மரங்களை அகற்ற ரூபா 7.2 மில்லியன் 2017 திசெம்பர் 31ல் செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும் முரண்பாட்டு கட்டணங்களின் கீழ் பாமங்கடை தொடக்கம் கெஸ்பவே வரையான வீதியில் 806 மரங்களை மீள்நடுவதற்காக ஒரு மரத்திற்கு அதிகபட்ச செலவான ரூபா 4,000 தொடக்கம் ரூபா 9,677 என்ற வீச்சுக்குள்ளான வீதமாக முரன்பாட்டு கட்டணங்கள் மொத்தமாக ரூபா 4.48 மில்லியன் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது.

### 3.4 புறநடையான நடவடிக்கைகள்

செயற்திட்டமானது காலி - பத்தேகம வீதியின் காணி கொள்வனவிற்காக ரூபா 18.33 மில்லியனை செலவிட்டிருந்தது, அது செயற்திட்டத்தின் உண்மையான பணிப்பரப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பெறுமதி சேர்வரி பெறுமதி ரூபா 218 மில்லியன் ஒப்பந்தகாரரினால் 2017 திசெம்பர் 31 வரை செருத்தப்படவேண்டி இருந்தது, ஒரு அமுல்படுத்தல் முகவராக ஒப்பந்தகாரருக்கான கொடுப்பனவுகளுக்கான உள்நாட்டு வரிகளுக்கான வரிவிலக்கானது செயற்திட்டத்தின் ஆரம்பகட்டத்தில் பெற்றுக்கொள்வதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 காணி சுவீகரிப்பு

இருக்கின்ற தகவலின் பிரகாரம், அரசுக்கு சொந்தமான 1535 காணித்துண்டுகள் உள்ளடங்களாக 7082 காணித்துண்டுகள் கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது, அதில் 4343 காணித்துண்டுகளுக்காக ரூபா 1,933 மில்லியன் இழப்பீடு காணி சுவீகரிப்புச்கட்டத்தின் பிரிவு 17ன் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், காணிசுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்ற குழுவின் தீர்மானத்திற்கமைய ரூபா 4,134 மில்லியன் மேலதிக இழப்பீடு வழங்கப்பட்டிருந்தது. மேலும் இழப்பீட்டு கொடுப்பனவின் தாமதத்திற்கான வட்டியாக ரூபா 31 மில்லியன் 2017 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்டிருந்தது.

**3.7 செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்தல்**

---

இருப்பினும் செயற்திட்ட நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 31ல் முடிவுறுத்தப்பட்டிருந்தது, செயற்திட்டதின் சொத்துக்களை உரிய அமுலாக்கல் முகவருக்கு கையளிப்பதற்கும் முடிவுறுத்தல் நோக்கத்திற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் தேவையான நடவடிக்கை செயற்திட்ட நிறைவேற்று முகவரால் வழங்கப்பட்டிருக்கவில்லை.